# திருவாவடுதுறை ஆதீனத்து மஹாவித்வான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் "பிரபந்தத்திரட்டு" - பகுதி 23 (2670 - 2770)

## மதுரைத் திருஞானசம்பந்தசுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி.

## Tiricirapuram makAvitvAn mInATci cuntaram piLLaiyin pirapantat tiraTTu - part 23 (verses 2670 -2770)

## pUvALUrp patiRRuppattantAti

## In tamil script, unicode/utf-8 format

---

**Acknowledgements:**

Our Sincere thanks go to Dr. Thomas Malten of the Univ. of Koeln, Germany for providing us with a photocopy of the work.

Etext preparation and proof-reading: This etext was produced through Distributed Proof-reading approach.
We thank the following persons in the preparation and proof-reading of the etext: .Karthikeyan, V.S. Kannan, Swaminathan Narayanan, V. Devarajan
Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.
© Project Madurai, 1998-2007
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet. Details of Project Madurai are available at the website
**http://www.projectmadurai.org/**
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

---

## திருவாவடுதுறை ஆதீனத்து மஹாவித்வான்
## திரிசிபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்
## பிள்ளையவர்களின்
## "பிரபந்தத்திரட்டு" - பகுதி 23
## மதுரைத் திருஞானசம்பந்தசுவாமிகள்
## பதிற்றுப்பத்தந்தாதி.

உ

கணபதிதுணை.

### விநாயகர்துதி.

2670 ஓத வினிய தமிழ்க்கூட லோங்கு
ஞான சம்பந்தர்
பாத யுகமே லொருபதிற்றுப் பத்தந்
தாதித் தொடைசாத்தப்
போத மலர்நா ரினிதுதவும் பொல்லா
வினையிற் புக்குழலு
மாத ரகஞ்சா ராவொருகோட் டாம்ப
லடித்தா மரைமலரே. 1

### நூல்.

2671 சீர்பூத்த திருமுகமுந்தேவிமுலைப்
பால்பூத்த செய்ய வாயு,
மேர்பூத்த வருள்பொழியு
மிருவிழியும்
பொற்றாள மேந்து கையும்,
பேர்பூத்த தமிழ்க்கூடற் றிருஞான
சம்பந்தப் பெருமான்
செம்பொற்,
றார்பூத்த சிறுதண்டைத் தாளுமுளத்
துள்ளிவினை தள்ளி 1
வாழ்வாம்.
2672 வாழிநெடு வழுதிபுறக் கூனிமிர்த்த
நினக்கரிதோ மாறாச் சன்ம,
வாழியுழல் வேனகக்கூ
னிமிர்ப்பதுதென்
கூடலம ரமல வாழ்வே,
வீழியித ழுமையளித்த வள்ளநிறை
பரஞான வெள்ளமுண்டாய்,
காழிவளர் மாமணியே
கவுணியர்தங்
கற்பகமே கலைவ லோயெ. 2
2673 கலைபுகழா யிரமுகத்தெய்

வதமந்தா கினியுடைய
கடவுண் மற்றை,
யலைபுனலாட் டவுமகிழு
மதுபோற்றென்
கூடலகத் தன்பர் வாழ்வே,
விலையில்கவு ணியமணியே
வேதாதி
முழுதுடையவிமல நீயோ,
தலையடையாச் சிறியேன்செய்
புன்றுதிக்கு
மகிழ்கூர்த றக்க தாமே. 3

2674 தக்கபடி யன்றியிரும் படியிடந்து
வரையுருட்டிச் சலதி மோது,
மிக்கபுனற் பேர்யாற்றிற்
பல்லோருங்
கரையேறி விளங்கச்செய்தாய்,
தொக்கசுவைத் தமிழ்க்கூடற்
கவுணியக்கன்
றேயொருவேன் றொடர்ந்து
நாளும்,
புக்கபவப் பேர்யாறுங் கரையேறச்
செயினினக்குப் புகழன்

றாமோ. 4

2675 புகழ்பரவு தமிழ்மதுரைப் புகலிகா
வலசலசப் பூந்தார்மார்ப,
நிகழ்கருணைக் குரவமறை
நிறைசெல்வ
பரஞான நேய வாய,
வகழ்வினைய ருளத்தமரு மமரசிறு
சிலம்பொலிக்கு மம்பொற்
றாள,
திகழ்வினையி லமணரென
வடியன்மல
நினக்கெதிராய்ச் சிதைவ
தென்றோ. 5

2676 என்றுநிகர் மணிமாடக் கூடலிட
மோவிணையி லெண்டோ
ளம்மா,
ஒன்றுதிரு வரத்துறையி
லளித்தமணிச்
சிவிகைகொலோ வருநோன்
புற்று,
நன்றுமிகு சிவபாத விருதயர்தந்
திருத்தோளோ நாயே னுள்ள,

மொன்றுதலி னீயுறைய
மழவிளங்கன்
றேமணியே யுவட்டாத்
தேனே. 6
2677 தேனார்க்கு மலர்த்தடத்து
மோட்டெருமை
பாயவெரீஇச்சினந்த வாளை,
கானார்க்குங் கற்பகத்தின்
கழுத்தொடிய
மீப்பாயுங் கணிசூழ் கூடல்,
வானார்க்கும் பெரும்புகழாய்
வண்புகலிப்
பெருந்தகையே மறையோர்
பேறே,
யானார்க்குங் குடியல்ல
னினக்கடியேனுய்யுநெறி
யருள்க வின்றே. 7

2678 அருண்மிகுபொற் றில்லைமூ
வாயிரருங்
கணநாத ராக வாங்கே,
தெருண்மிகுநன் னீலகண்டப்

பாணருக்குக்
காட்டியநீ தேமாஞ்சோலை,
பொருண்மிகுவிண் ணுலகளக்கும்
புகழ்க்கூடற்
சம்பந்தாபுலவரேறே,
வெருண்மிகுநா யேன்காண
வொருநினைக்காட்
டாதிருக்கும் விதமற்
றென்னே. 8
2679 என்னையிவன் றனையடிமை
கொள்கென்பா
னடியார்தாமில்லை
யோவென்,
றன்னையனை யாய்கூடற் சம்பந்தா
நீநினையே லலகிலாச் செம்,
பொன்னையுடை யாருளதன்
வரவைவெறுத்
தாருமெவர் புத்த ரானோர்,
முன்னையடி யாராகக்
கொண்டவனு நீயன்றி
மொழியின் யாரே. 9

2680 மொழியுமறை யாயிரமு
மெண்ணிறந்த
மறையோர்க்கு மொழிந்தா
சங்கை,
யொழிதரவைந் தெழுத்துமே
யந்தியின்மந்
திரமென்று முணர்த்தி
நின்றாய்,
பொழிநறவப் பூஞ்சோலைப்
புகழ்க்கூடற்
சம்பந்தா புகலடைந்தேன்,
வழிதருமத் துணைவேண்டா
வைந்தெழுத்தே
யுணர்த்து கெனின்
வருத்தமென்னே. 10

2681 வேறு.
வருந்துபொய்ப் பவஞ்ச
வாழ்க்கையை
மதித்துன் மலரடி யிணைமதி
யாதே,
யிருந்தஞர்ப் பிறந்தை யுற்றுழல்
வேன்கொ

லின்னமு மிடையறா வன்பி,
னருந்தவர்க் கரசே யாலவா யமுதே
யருட்கவு ணியர்குலக் கன்றே,
திருந்துபல் லோர்க்குஞ் சிவகதிப்
பரிசுசேர்தர நல்குதே சிகனே. 11

2682 தேசினாற் பொலிநின் றிருமணத்
தடைந்த
செழுந்தவத் தவரொடும்
விரைந்து,
கூசிலா தடியே னடைந்திலே
னடையிற்குலவுவா
னவர்க்கெலா மரிய,
வாசிலாப் பதப்பே றெளிதினி
முன்னியாவதெ
ன்னாவவென் செய்கேன்,
மாசிலா மணியே
மதுரைவாழ்தருவே
வளர்கவு ணியர்குல விளக்கே. 12

2683 குலவுநின் கருணை பெரியர்பா
லன்றிக்
குணமிலாச் சிறியனேன் பாலு,

நிலவுறப் புகுதல் வழக்கருண்
மதுரை
நிறைதிரு ஞானசம் பந்தா,
மலர்தலை யுலகில் வருபெரு
வெள்ளம்
வாரிவாய்ப் புகுவதே யன்றிப்,
புலர்தரு முறவி யளையினு மோடிப்
புகுதனீ யறிந்திலாய்
கொல்லோ. 13

2684 கொல்லையா னுகைக்குங் குழகனா

ரிடப்பால்குடிகொளுங்கோதைமெல்
லருப்பு,
முல்லைநேர் நகையாண்
முலைபொழி
தீம்பான்முற்றுமுண்
டாங்குமிழ்ந் தாங்கு,
வல்லமா மறைநற்
றமிழ்பொழிமதுரை
வள்ளலே புகலிமா மணியே,
யில்லையன் பென்பா லாயினும்
புரத்த

லிலகுநின் னருட்கியல்
பன்றே. 14

2685 இயறெரி புலவர் புகழுமோத் தூரி
லேற்றுவன் பனையெலா
மிலகி,
மயலறு கதியிற் புகவருள் புரிந்தாய்
மற்றவை செய்தவன்
பென்னே,
புயறவழ் குடுமி மாளிகை மதுரா
புரியுறை முத்தமிழ் விரகா,
வுயலுற வெனையு மங்ஙன
நினைந்தாண்
டுன்னடி யிருத்துத லழகே. 15

2686 அழகிய மயிலை யத்தியைப் பூவை
யரசுசெய் தனையுதவாமை,
பழகிய பெண்ணை பலவுமின்
குரும்பை
பலகொளப் பாடினைபற்பல்,
கழகமுற் றோங்கு மாலவா யமுதே
கவுணியர்
பெருங்குலவிளக்கே,

மழவிளங் களிறே யென்மனந்
திருத்தின்
மற்றுமப் புகழொடொன்
றாமே. 16

2687 ஒன்றுவெங் காமம் வெகுளியுண்
மயக்க
மோங்குமும்மதமெனக்
கொண்டு,
கன்றுமென் மனமாங் களிறகல்
பவஞ்சக்காடெலா முழிதரு
மதனை,
வென்றியா னடக்க வலியிலா
மையினான்மேதகு கூடலென்
றுரைக்குங்,
குன்றில்வாழ் தெய்வக் குருபர
சமயகோளரி
சரணடைந் தனனே.
17

2688 அடையல ரஞ்சுஞ் சூற்படைச்
சொக்க
ரங்கயற் கண்ணியோ டமர்ந்த,
நடைகெழு கூட னன்மறைக்

கொழுந்தே
நண்ணினர்க் கெய்ப்பினில் வைப்பே,
யிடையறா வன்பி னெண்ணிலார்
குழுமியேத்துநின் சந்நிதா னத்திற்,
கடையனேன் புரியன் பறுதுதி
நாணங்கழித்தெதி
ரடையவும் பெறுமே. 18

2689 பெறலருஞ் செல்வ நின்னடி யேத்தும்
பெருமையேயென்பது தெரிந்துந்,
திறல்கொண்முற் றவமில் லாமையால்
வருந்தித்திகைத்திடு நெஞ்சமென் செய்கே,
னறவருள் விளக்கே யாலவாயமுதே
யற்புதக் கற்பகக் கனியே,
புறவவண் களிறே

போற்றுவார்பொன்னே
பொங்குபே ரருட்பெருங்
கடலே. 19

2690 கடல்விளிம் புடுத்த கண்ணகன் புவியிற்
கழிதரு பொய்யெனு மெய்யை,
யடன்மிக யானென் றவாய்வினைச்
சிமிழ்ப்புண்டவத்தைக டொறும்புகு மடியே,
னுடலபி மான முதலிய வெறுத்துன்
னொண்சிலம் படியடை குவனோ,
மடல்விரி கமல வாவிசூழ் மதுரை
மாநகர்க் கவுணியக் கன்றே. 20

2691 வேறு.
கன்றி யொருவே னிவண்வருந்தக் கடவ
னோவங் கயற்கண்ணி,
யொன்றிமகிழு மொருமுதல்வ

னுறைதென்
கூடற் சம்பந்தா,
துன்றி வருத்து குளிர்க்கஞ்சித்
தொண்டர்
குழுமி முறையிடுமு,
னன்றி யுகவு நீலகண்ட நவின்று 21
தீர்த்த நல்லோயே.

2692 நல்லாய் கூடற் சம்பந்தா நல்லார்
போல நமைத்தொழநீ
கல்லாயென்று கைவிட்டாற்
கடையே
னுய்யு நெறியுளதோ,
செல்லாமழைபெய் யாதொழியிற்
றிரைசூழ் புவிக்குய்
வகையுண்டோ,
வல்லா யுறவென் றூழுதய மாகா
விடிற்கண் ணறிவதெவன். 22

2693 அறிவ தறியும் வகையுணர்த்தி
யால வாயி னகத்தொருநீ
செறிய வுறைத லாற்புகலித் தேவர்
வடியர் சிறந்துய்ந்தார்,

வெறியனாயி னேனொருவேன்
வெய்யோ னுதயத்
தெவர்விழியுங்,
குறிகொளொளியே யடைமவிருள் 23
கூகை விழிக ளடைவனபோல்.

2694 அடைய வினிமை
யருளுநின்பொன்
னடிக ளடைந்தேனதற்கேற்ப,
விடைய றாத வன்பில்லே
னெனினுங் கூடற் சம்பந்தா,
தடையி லடியா னினக்கென்றே
சாற்றா நிற்ப ரெனையுலகர்,
மிடைசில் லுறுப்பி லார்தமையு
மக்க ளென்றே
விளம்புதல்போல். 24

2695 விள்ளுங் கருணைப்
பெருந்தகையே
விண்டாழ் பொழில்சூழ்
வியன்மதுரை,
யுள்ளு மடியே னுள்ளுமுறை
யொருவா பெருமுத்
தமிழ்விரகா,

தள்ளு மமணர் குலகாலா
தண்டைத் தாளா தனிமுதலே,
துள்ளுங் கயல்சேர் வயற்புகலித்
தோன்றா லென்முன்
றோன்றாயே. 25

2696 தோன்றாய் விழிமுன் மனமாசுந்
துடையா
யென்னோவருந்திமன,
மான்றா யென்றும் வாய்மலராய்
மன்னன்
றென்னன்மதுரைவளர்,
சான்றாய் பெருமா னிடப்பாகத்
தையன் முலைப்பாலுண்டனே,
கான்றாய் போலின் றமிழ்பொழிந்த
கருணாநிதியே யிதுதகவோ. 26

2697 தகவே யென்றுன் சரண்புகுந்தேன்
றள்ளி விடநீ வல்லாயோ,
நகவே திரிவா னடியார்போ
னடிக்குங்
கள்வ னிவனம்பாற்,
புகவே தகானென் றுளத்தெண்ணல்

புகழ்த்தென் கூடற் புகலியாய்
மிகவே யலைசெய் வாரிதியுள்
விரைந்தங் கணநீ ரும்புகுமால். 27
2698 புகுமே பிறந்தை யென்பாலும்
போமே பொறியின்
வாய்மனமு,
நகுமே சகமு மெனை நோக்கி
நண்ணு மேயுண் மயக்கமுநீ,
தகுமே யென்று தடுத்தாளிற்
சம்பந் தாதோ மொருமூன்றுஞ்,
செகுமே லவர்க டொழுங்கூடற்
றேவா குரவர் சிகாமணியே. 28
2699 மணியே யனையாய் திருப்புகலி
மறையோர் பேறே
மதுரைநகர்க்,
கணியே தோர் பலரையுநீ யடிமை
கொண்டா யதற்காகத்
தணியே முனிவென்
றுனைவெறுக்கத்
தக்கார் சிலரு மிருந்தாரோ,
துணியே யெனையு மடிமைகொளத்
துணிந்தால்

வெறுப்பரெவரையா. 29
2700 ஐய வயனா னெடுமாலா லளந்து
காணாப்பரம் பொருளைத்
துய்ய வொருகை விரலாலே
சுட்டிக் காட்டுஞ் சம்பந்தா
வைய மதிக்குந் தென்கூடன்
மணியே வயங்கு பொற்றாளக்
கைய வுன்னை யெனக்கறியக்
காட்டி லதுவே போதுமால். 30

2701 வேறு
போது செறி பிரமபுரப்
பொய்கையதன் கரையிடத்துத்
தாது செறி மலர்ச்சோலைத்
தண்கூடற் சம்பந்தர்
யாதுரைசெய் கேன்ஞான
வமுதுண்ட நாளமண
ரோதுகொடுங் கடியவிட
முண்டார்போன் றுலைந்தனரே. 31
2702 உலையாத புகழ்க்கூட
லுவமையின்முத் தமிழ்விரகர்
கலையாரு மதியனைய காமர்மணிச்

சிவிகைமிசை
யிலையார்தண் பொழிலுலக
மேத்தவே றியஞான்று
கொலையாரு மனத்தமணர்
கூர்ங்கழுவே றினரொத்தார். 32

2703 ஒத்தபுக ழாலவா யுறையுமறைக்
கவுணியனார்
சித்தமகிழ் திருமுனெழு
திருச்சின்னப் பெருக்கோசை
வித்தகமி லமணருக்கு வெங்கூற்றி
னோசைகொலோ
குத்திரவம் மறலிகடாக் குரலோசை
யோவறியேம். 33

2704 அறிவுருவ னாலவா யாண்டகைமுத்
தமிழாளி
செறிநிழல்செய் மணிமுத்தின்
சிவிகைகுடை செழும்பந்தர்
பறிதலைய ரூற்றைவாய்ப்
பதகர்முதற் பரசமய
வறியவருக்கு வேனில்வெயில்
வயங்குதலொத் திருக்குமால். 34

2705 இருக்குமுத லோதாம
லெளிதுணர்ந்த கவுணியர்கோன்
குருக்கிளர்சண் பையினின்றுங்
கூடலடைந் திருந்தவுடன்
றருக்கமிகப் பேசிமயிர்
தலைபறித்திட் டுழலமணக்
குருக்கள்புவி நின்றுகழுக்
கூடலடைந் திருந்தனரே 35

2706 இருந்தவர்க ளேத்தெடுக்கு
மெம்மிறைமுத் தமிழாளி
யருந்தமிழ்நா வலருறையு மாலவா
யமரண்ணல்
பொருந்துதிரு மறைக்காட்டிற்
புகல்சதுர மறைப்பாடல்
வருந்துமனப் பரசமயர் வாயடைத்த
பாட்டன்றோ. 36

2707 பாட்டுவரிச் சுரும்புளரும்
பைம்பொழிலிற் பசுமயிலிற்
கோட்டுமுலை யார்பயிறென்
கூடன்மறைக் குலக்குருளை
வாட்டுவினை கடிமயிலை மட்டிட்ட

வெனப்புகல்பா
ஆட்டுபுகழ்ப் பெருஞ்சைவர்க் 37
குயிர்கொடுத்த பாவன்றோ.
2708 அன்றுகனி வொடுபோக
மார்த்தபூண் முலையாண்மற்
றென்றுகவு ணியாமதுரைக்
கிறைவாரு ளியபதிக
நன்றுசெறி நெறியொருவா
நல்லறிவி னோர்முகங்கட்
கொன்றுபொலி வுறுத்தியதே
லுவமையதற் குளதாமோ. 38

2709 உளரளிவண் பொழின்மதுரை
யொப்பிலா மணிபுகலிப்
பளகில்கவு ணியக்கன்று பாலறா
வாய்க்குருளை
வளமலிபா சுரமொன்றே
வான்சைவ மீடேற
வளவிலமண் கழுவேற
வாற்றெதிரே றியதம்மா 39
2710 மாமேவு திருவால வாய்ஞான
சம்பந்தர்

பூமேவு திருக்காத்தாற் புரிந்தளித்த
திருநீறு
கோமேவு வுழுதியுடல்
குளிர்தரச்செய் தாங்கிருந்த
தீமேவு தொழிலமணர்
சிந்தையில்வெப் புறுத்தியதே. 40

2711 வேறு
தேவர் தானவர் சித்தர்வித் தியாதரர்
திசைபுரப் பவர்மற்றும்
யாவருள்ளவ ரவரெலாம் வந்துவந்
தடியிணை தொழமேவு
மூவா தம்பிரா னாலவா யினிதமர்
முத்தமிழ் விரகாயான்
பாவரோடுற வுறறுழ வாதுநின்
பதத்துற வுறவுன்னே. 41

2712 உன்னு வார்பிறப் பொழித்திடு
மொருவனை
யுத்தமர்பெருமானைப்,
பன்னு வார்க்கினிப் பானைமெய்ஞ்
ஞானவின் பாலறாவாயானை,
மன்னு வார்பொழின மதுரையா

சிரியனை வழிபடா
தவரெல்லாந்,
றுன்னு வார்பிறப் பொழிவரோ
வொழிவார் 42
தொழுதவத்தவரேனும்.
2713 தவரெனப்படு வார்களு மும்மலத்
தடையறு சிவஞானத்,
தவரெனப்படு வார்களு மிருவளி
யடைத்தொரு வழிநிற்பா,
ரிவரெனப்படு வார்களுஞ் சிவகதிக்
கெதுவழி யென்றோயாய்,
பவரெனப்படு வார்களு மதுரைச்சம்
பந்தன்மெய் யடியாரே. 43

2714 அடியா செல்வமே யாலவாய்
முத்தமி ழாளிகேண்
மதிபொல்லாக,
கொடிய நாயினேன் விண்ணப்ப
மொன்றுவான் குளிர்மதி
நதிசூடு,
முடிய னையநிற கெனையனெற
கனையைநீ

முடிவினமறறவற்***,
நெடிய சீர்புனை யெனையனமற்
றனையனோ
நினக்கியானலலேனே. 44

2715 அல்லை நேர்களத் தண்ணறன்
றிருவடிக் கருகரா
யனைவோருந்,
தொல்லை மாவினைத்
தொடரோழிந்
தானந்தந்
துயத்திடவருள்கூர்ந்து,
வில்லை வீசுபஞ் சாக்கர மோதிய
வித்தக வியன்கூட,
னல்லை நீயடி யேற்குமவ் வாறரு
ணலகிடி னுயவேனே. 45

2716 உய்ய லாம்வகை யொன்றுகண்
டேனஃ
துண்மையேயின்தோமன்,
வைய வாழ்வடை மயங்கியே
யுழிதரு
மாந்தாகாண் மடைநண்ணான்

... .... .... ...
சம்பந்தன்,
.... ..... .... .....
தொழும்புபூண்றேறானே. 46

2717 உறவும் வேனினண் பகலழ
லிடைப்புகுந்
துணங்குதலுணாநீத்தே,
யறவும் வாடுதன் மூச்சவித்
திருத்தல்கா
லாதிதுய்த்தலுமோவ,
லிறவு நேருமென் றிடக்குகை
வனம்புகல்
யாவுநீத்திடும்வம்மின்,
புறவ நாயகன் கூடல்வாழ்
புண்ணியன்
பொன்னடி யடைவீரே. 47

2718 அடையு நற்பசு விருக்கயான் கற்பசு
வடைந்தனென்
கறந்தெய்த்தே,
னடைகொ ளாலவா யிடையமர்
தருபர
ஞானபோனகக்கன்றே,

குடையும் யானமும் பந்தரு
முத்தமாக்
கொண்டமுத்தேபொன்னே,
மிடையு மும்மல மகன்றருள்
பெறும்வகை
மெய்யருள் புரிவாயே. 48

2719 வாய்ந்த செம்பொனாற்
செய்கொழுக்
கொண்டியான் வரகினுக்
குழலுற்றே,
னேய்ந்த தீஞ்சுவைக் கனியொரீஇக்
காய்கவர்ந்தென்றுமுண்
பவன்போன்றே,
னாய்ந்த நாவலர் புகழ்மது
ராபுரியண்ணலே
யடல்கொண்டு,
காய்ந்த காமத்தர் கருதிடுங்
கவுணியர்
காவலா வருள்வாயே. 49

2720 அருந்து தற்கமை பாலைவிட்

டருந்தினே
னமைதராப் புளிங்காடி,
பொருந்து கங்கையா டப்புகுந்
தள்ளலைப்
பூசிடு பவன்போன்றேன்,
றிருந்து மாலவாய்த் தெள்ளமு
தேவர
சிரபுரத் தவரேறே,
மருந்து நேருன தருண்மொழி
பெற்றியான் 50
மலமறுத் துயலென்றே.

2721 வேறு.
என்றவ றனைத்து மெண்ணா
தின்னருள் புரிய வேண்டு
நின்றசீர் நெடிய மாற னிலவுநன்
னெறிக்க ணேவந்
தொன்றமுன் றடுத்தாட் கொண்டா
யுவமைதீர் புகலி வாழ்வே
வென்றசீ ருடையாய் கூடல்
விளக்கமே மெய்மமை யானே. 51

2722 யானென தெனுங்கோண் ஞான
வழல்கொடு நிமிர்க்க வல்லான்

ஞானசம் பந்த னன்றி நாடின்மற
றகிலத் தியாவ
ரீனமி லறவொர் சூழ மிருந்தமிழ்க்
கூடல் சார்ந்து
மானமா ரனையா வள்ளன் மலரடி
வணங்கு வீரே. 52

2723 வணங்குவா ருள்கு வார்வாய்
வாழ்த்துவார் வழுத்து வாரோ
டிணங்குவார் நின்பொற் பாத
மெய்துவா னெண்ணி யன்பர்
குணங்குலாந் துவாத சாந்தக்
கூடனமே வியசம் பந்தா
விணங்குறாப் பவஞ்ச வாழ்க்கை
யேட்டையே னென்செய் கேனே. 53

2724 செயம்மலி துவாத சாந்தத் திருநக
ரொருசம் பந்தா
..... .... .... .... ....
மெய்யம்மலி செல்வ ரின்பம்
விழைத்தனர் புகுநின் றாளிய
பொயம்மலி யேழை வாழ்க்கைப்
புன்மையென புகலொ ணாதோ. 54

2725 ஒண்ணுத லுமையாள் கொங்கை
யூறிய பரமெய்ஞ் ஞானங்
கண்ணுத லருளா லுண்ட கவுணியர்
காளாய் மேலோ
ரெண்ணுதல் செய்யுங் கூட
லுடையநீ யென்னோ டூடல்
பண்ணுத றகாதுன் றீராப் பரவருட்
பெருமை நோக்கின். 55

2726 நோக்குயர் கூடல் வாழ்வே
நோன்மைசா லருட்சம் பந்தா
தேக்குசீர் வீரட் டானச் சிவபிரா
னாடல் கண்டா
யாக்கிய புகழின் மேலா மையநின்
சித்த மென்றன்
பாக்கிய மலர ருட்கட் பார்வைக்கே
பார்வை வைத்தேன். 56

2727 வையகத் தன்பு பூண்டார் குற்றமு
மற்றஃ தில்லார்
செய்யநற் குணமு முள்ளஞ்
செறித்திடாக் கருணை வாழ்வே
பொய்யகன் மதுரை மூதூர்ப்

புகலியாய் நின்றா ளன்றி
வெய்யவேழ் பிறவி யென்னும் 57
வீரைக்கோர் மதலை யின்றே.

2728 இன்றடம் பொழில்சூழ் கூட
லெழிற்கவு ணியர்தங் கன்றே
யொன்றவைந் தெழுத்தி னுள்ளே
யோதுமுப் பொருளுந்தேற
நன்றடி யவர்க்கு ணர்த்தி நலமுறுத்
திடுதல் போலெற்
கென்றருள் புரிவை யென்றே
யிருந்தன னெதிர்பார்த் தம்மா. 58

2729 அம்மைபா லுண்ட ஞான
வருட்பெருங் குருளை கூட
லெம்மையா ளுடைய தெய்வ
மிலகரு ணோக்கஞ் செய்ய
நம்மையாய் புரிந்த பாச நசித்திடு
நம்பு நெஞ்சே
வெம்மையார் கதிரோன் றோன்ற
வீடிடா விருளு முண்டோ. 59

2730 உண்டுடுத் துழல்வேன் றெய்வ

முண்டெனு முறுதி நெஞ்சுட்
கொண்டுசற் றறியேன் காமக்
கொள்கல னாகி நிற்பேன்
றொண்டுபட் டுன்றா ளேத்தத்
துணிவனோ கணித மில்லா
வண்டுதுற் றியபூஞ் சோலை 60
மதுரைமா ஞான வாழ்வே.

2731 வேறு.
வாழு மாறுளத் தெண்ணினன்
மற்றது மருவத்
தாழு மாறுனைத் தாழ்ந்தில
னாகிலென் றவறே
சூழு மாதவிச் சோலையின்
மலர்தொறுந் தும்பி
வீழு மாலவாய் மேவிய சிரபுர
வேந்தே. 61

2732 வேந்த ராகிலென் முப்பகையறுத்தற
விளங்குஞ்
சாந்த ராகிலென் றக்கவ ராகிலென்
றவஞ்செய்
மாந்த ராகிலென் மதுரையிற்

கவுணியன் மலர்த்தா
ளேந்த வாய்ந்தநெஞ் சுடையரே 62
சிறந்தவ ரென்றும்.

2733 என்று நேர்மணி மாளிகைக்
கூடல்வா ழிறையை
யன்று ஞானபோ னகமினி
துண்டவா ரமுதைக்
கன்று சூழ்வினை களைந்தடி
யார்க்கருள் கனியை
நன்று கண்டுதோத் திரஞ்செயார்
நாவென்ன நாவே. 63

2734 நாவ லோர்புகழ் ஞானசம் பந்தனை
நல்லோ
ராவ லோடணை யாலவா யிருந்தரு
ளமுதைத்
தேவ லோகமே யெனச்சொலுஞ்
சிரபுரச் செல்வர்
காவ லோனைநேர் கண்டிடார்
கண்ணென்ன கண்ணே. 64

2735 கண்ண கன்புவி தொழுதெழ

வாலவாய் கலந்தே
யெண்ண வம்புரி யமணரைக்
கழுவில்வைத் தியார்க்கும்
வண்ண நீறளித் திருந்தருண்
ஞானமா மணியின்
றிண்ண வண்புகழ் கேட்டிடார்
செவியென்ன செவியே. 65

2736 செவிய வாவுமின் றமிழ்பொழி
செய்யவாய்த் தேனைப்
புவியு ளோர்புகழ் மதுரைமா
நகருறை பொன்னைச்
சவிவி ராங்கவு ணியர்குல
மணியைவெண் டாளக்
கவிகை யாளியை யருச்சியார்
கையென்ன கையே. 66

2737 ஏல வார்குழ லுமையருண்
ஞானமுண் டெழுந்து
சால வெங்கணும் பொழிதமிழ்க்
கொண்டலைத் தாவாச்
சீல மாதவ ராலவாய் மேவிய
கேவைத்

தால மேலுற வணங்கிடார்
தலையென்ன தலையே. 67

2738 தலைமை வைதிக மெய்தவுந்
தெய்வமாச் சைவ
நிலைமை யெய்தவு ஞானவா
ரமுதுண்ட நிதியை
யிலைகு லாம்பொழில் சூழ்மது
ராபுரி யிறையைக்
கலைவ லாளனைச் சூழ்தரார்
காலென்ன காலே. 68

2739 காலி னார்பொழிற் கனியுதிர்
தரவெழுங் கடுப்பிற்
சேலி னார்வயற் றிருமது ராபுரித்
தேவைச்
சாலி னார்மறைக் கவுணியன்
றனைத்தொழச் சாரா
மாலி னாருடைப் பிறப்பையெப்
பிறப்பென வகுக்கேன். 69

2740 வகைசெய் மூலமா விலக்கிய
மாகவு மறையிற்
றகைசெய் பல்பொருண் முற்றவுந்

தமிழ்பொழி தருவை
முகைசெய் வான்பொழி லாலவாய்
மேவிய முதலைத்
தொகைசெ யுந்துதி சொற்றனன்
சிறந்ததென் றுணிவே. 70

2741 வேறு.
துணியு மாறொன்று சொல்லுவன்
யார்க்கும்வான்
பணியுங் கூடற்சம் பந்த
னடிதொழிற்
றணியும் வெவ்வினை சார்த
லறும்பவ
மணியு மொன்றியொன் றாக்கதி
யாருமே. 71

2742 யாரு மேத்து மியன்மது ராபுரிச்
சீருந் தேசுந் திருந்துசம் பந்தர்தா
மூரும் யானமுன் றாங்கின
ரொண்பதந்
தேரு நீரிலென் சிந்தையுந்
தாங்குமே. 72

2743 தாங்கு பேரருட் சம்பந்தன் கூடலா

னோங்கு மாமுறை யோதி
யெழுதினோ
ரேங்கு வேனுக் கெழுவகைச்
சன்மமுந்
தேங்கு மாறெழு தாவகை தீர்ப்பரே. 73

2744 தீரன் ஞான சிகாமணி பூந்தரா
யூரன் கூட லொருக்கன் றிருமுன
ரார வொண்டிருச் சின்னம தூதுவார்
வீர மல்கென் வினையையு
மூதுவார். 74

2745 வாரு மன்பினர் வாழ்த்தும்
பகலியார்
தேருங் கூடற் றிகழ்கரு
பிள்ளையார்க்
கோரு மன்பின் விருந்தமு தூட்டினா
ராரு மெற்கரு ளாரமு தூட்டுவார். 75

2746 ஊட்டி யன்புயிர்க் கோரெழு
சன்மமும்
வீட்டி யாளும் விரகர்சம் பந்தர்க்கு
நாட்டின் மிக்கநல் லாலவா
யீதென்று

காட்டி னாரெற் கருங்கதி
காட்டுவார். 76

2747 வார மிக்க மதுரையிற் சம்பந்தர்
சேர வாற்றியெண் ணாயிரந் தீக்கழு
வார வஞ்ச வமணருக் கூன்றினார்
பார வாங்கதிப் பாடெனை
யூன்றுவார். 77

2748 ஊன்ற வுள்ளத்தி னுள்ள
பொருளெலா
மீன்ற மாதொடு மின்றமிழ்க்
கூடல்வா
ழான்ற சம்பந்தர்க் காக
வொதுக்கினார்
மான்ற வென்னை மலநின்
றொதுக்குவார் 78

2749 குவல யம்புகழ் கோமது ராபுரித்
தவல ரும்புகழ்ச் சம்பந்தப்
பிள்ளையா
ருவமை தீரடித் தொண்டருக்
கொல்லையே
கவலி றொண்டுசெய் வார்கன

வானரே. 79

2750 வான வாழ்வு மதிப்பரி தாஞ்சிவ
மோன வாழ்வெனு முத்தியு
நல்குமிக்
கான கூடன்மெய் யாறு முகத்திரு
ஞான சம்பந்தர் நாண்மலர்ப்
பாதமே. 80

2751 வேறு.
பாதக மும்மல பந்தத் தாலுறு
நோதக வொழிதர நூலு ணர்ச்சிசான்
மேதக வோர்குழு மேவு
மாலவாய்ப்
போதகன் கவுணியன் புகழ்வி
ரும்புவாம். 81

2752 விரும்பிடப் படுவது மெய்ம்மை
யாவதுங்
கரும்பினு மினிப்பதுங் கவலை
தீர்ப்பதுஞ்
சுரும்புளர் நறுமலர்ச் சோலை
யாலவா

யிரும்புகழ்ப் பிள்ளையா 82
ரிணையில் சீர்த்தியே.

2753 சீர்மலி யாலவாய் திகழும் வானகம்
பேர்மலி கவுணியப் பிள்ளை
யார்மதி
யார்மலி யவர்புக ழும்ம திக்கதிர்
நார்மலி யடியவர் சகோர நாளுமே. 83

2754 நாள்பல கண்டதென் மதுரை நற்றட
நீள்பல விதழ்மலர் நிலவு சம்பந்த
ராள்பல சீர்த்தியவ் வலரி லூறுதேன்
றாள்பல வளிக்குலந் ததைந்த
வன்பரே. 84

2755 அன்பமை யாலவா யவிரு
மோர்சிலம்
பின்பமை சம்பந்த ரினிய நீர்முகின்
மன்பெருங் கருணையம் மங்குல்
பெய்யுநீர்
துன்பமி லடியவர் சூழு மாமயில். 85

2756 மயலகல் கூடல்லாள் வழங்கு
வானக

முயல்புரி கவுணிய ரோங்கு
கற்பகஞ்
செயன்மிகு பொருட்கொடை திருவ
ருட்கொடை
யயல்விரா வடியவ ரளவில் 86
வானவர்.

2757 வானமும் புகழ்திரு மதுரை
பாற்கடல்
ஞானசம் பந்தனார் நயக்கு நல்லமு
தூனமில் சைவர்க ளுவந்த வானவர்
தீனவெவ் வமணரே திதிதன்
மைந்தர்கள். 87

2758 மைந்துசே ருதயமால் வரைதென்
னாலவாய்
நந்துசீர் மழகதிர் ஞான சம்பந்தர்
முந்துபு முகமலர் முளரி சைவரே
சிந்திரு ளறிவிலா வமணர் தேரரே. 88

2759 தேருமின் கவுணியர் செய்ய சீரினி
தோருமி னவர்களிந் துரைத்த
மாமறை
சாருமி னாலவாய் சார்ந்து தாழ்வற

வாருமி னருங்கதி யகிலத்
தியாருமே. 89

2760 மேவுதென் னாலவாய் விரும்பு
புண்ணியன்
மூவுல கும்புகழ் முதல்வன்
சம்பந்தன்
பூவுயர் பொன்னடி போற்று வார்மல
நோவுதீர்ந் துய்வது நுவல
வேண்டுமோ. 90

2761 வேறு.
வேண்டாமை வேண்டேன்
விழைந்தே திரிந்தேன்
பூண்டார் நினக்கன்பு பொய்ப்பாச
மற்றா
ராண்டா தரிப்பா யருட்கூடன் மேய
தூண்டா விளக்கே தொழுஞ்சண்பை
யானே. 91

2762 யானேது செய்கேனென் மனமெங்கு
மோடுங்
கோனே தடுத்தாட் கொளிற்பொய்ய

னுய்வேன்
றேனே கரும்பே திருக்கூடல் வாழும்
மானே பெருஞ்சண்பை வள்ளற்பி 92
ரானே.

2763 பிரான்வேறும் வேண்டேன் பிதற்றித்
திரிந்தே
னிராதார னாகாம னீயாண்டு
கொள்வாய்
குராவாச மென்சோலை
கொள்கூடன் மேவும்
பராஞான சம்பந்த பண்பாளர்
பேறே. 93

2764 பேறே துதிப்பார் பெருஞ்சண்பை
யாள
ரேறே தமிழ்க்கூட லின்பப் பிரானே
மாறே படும்புன் மனத்தேன்
மதித்துன்
னாறே யடைந்துய்வ தறிகின்றி
லேனே. 94

2765 ஏமங் குறித்தே யிருந்தே னதற்குன்
னாமங் குறித்தோத நாவைத்

திருப்பேன்
பூமங்கை மேவும் புகழ்க்கூடல்
வைப்பே
காமங்கை யாருட்பு காச்சண்பை
வாழ்வே. 95

2766 வாழ்வான திருண்மாய
மென்றெண்ண மாட்டேன்
றாழ்வான தேகொண்டு தடுமாறு
கின்றேன்
சூழ்வான ரேத்தித் தொழுங்கூடல்
வாழ்வே
யாழ்வாரி சூழ்காழி யாள்வார்க
டேவே. 96

2767 தேவே கரும்பே தெவிட்டா
ததேனே
கோவே திருக்கூடல் குடிகொண்ட
பொன்னே
மாவேரி யொண்டா
மரைத்தொங்கன் மார்பா
நீவேறு செய்தென்னை நீக்காம

லாளே. 97

2768 ஆளா னவர்க்கே யருட்டே சுறுத்துந்
தோளாத முத்தே தொழுங்கூடல்
வைப்பே
நீளாத ரத்தியாரு நின்றேத்து காழிக்
காளா யெனைக்கா கருப்பால்
கடிந்தே. 98

2769 கடிமா மலர்ச்சோலை ககனந்
துழாவும்
படிமே லெழுந்தண் பழங்கூடல்
வைப்பே
கொடிமாட மிகுவெங்
குருக்கொண்ட லேநின்
னடிமா மலர்க்கென்னை
யான்செய்த பிழையே. 99

2770 பிழையாது செயினும் பிறக்கா
தகற்று
மழையா ரருட்பெருமை
வாழ்கவளர் கூடற்
றழையாறு முகஞான சம்பந்த
குரவன்

விழையாறு நனிவாழ்க மிகவாழ்க சீரே. 100

மதுரைத்திருஞானசம்பந்தசுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி முற்றிற்று

---

This page was last updated on 28 May 2007.
Please feel free to send corrections and comments to the webmaster.